www.Padasalai.Net www.CBSEtips.in

**12 - STD** **இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2023** பதிவு எண்.

**பொதுத்தமிழ்**

நேரம்: 1.30 மதிப்பெண்கள்: 45

**I. சரியான விடையை தேர்வு செய்து விடைக் குறியீட்டுடன் எழுதுக.** (7x1=7)

1. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல்.....
   1) மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்
   2) ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விருப்பினாள்
   அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி
2. திண்ணியர் என்பதன் பொருள்
   அ) அறிவுடையவர் ஆ) மனஉறுதியுடையவர் இ) நம்பிக்கையுடையவர் ஈ) அறிவினார்
3. அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது
   அ) நம்பிக்கை ஆ) பெருமிதம் இ) புகழ் ஈ) அச்சம்
4. முச்சந்தி இலக்கியம் என்பது
   கூற்று 1 : கதை வடிவான வடிவம் உடையது
   கூற்று 2 : பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது
   அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1,2 சரி
   இ) கூற்று 1, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி
5. 16 நரம்புகளைக் கொண்டது _______ யாழ்?
   அ) செங்கோட்டியாழ் ஆ) மகரயாழ் இ) சகோடயாழ் ஈ) பேரியாழ்
6. திரைப்படத்தில் கதையும் சொல்லலாம் எனக் கண்டுபிடித்தவர் ?
   அ) லூமியர் சகோதரர்கள் ஆ) ஜார்ஜ் மிலி இ) எடிசன் ஈ) சாப்ளின்
7. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரின் பெயரெச்சம்
   அ) உண்டு இ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

**II. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி.** (2x2=4)

8. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?
9. மனவுறுதியின் தேவை பற்றித் திருக்குறள் கூறுவது யாது?
10. செவியறிவுறூஉ - துறையை விளக்குக?

**III. எவையேனும் ஒரு வினாவிற்கு விடையளி.** (1x2=2)

11. பருவத்தே பயிற்செய் - நேரமேலாண்மையோடு பொருத்தி எழுதுக?
12. கடலுக்கான வேறு பெயர்களை எழுதுக?

**IV. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி.** (4x2=8)

13. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க?
14. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக?
   1. குதிரை, வேகம், ஓடு, தாவு 2. திரை, காண், கைதட்டல், மக்கள்
15. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக? அ) ஆற அமர ஆ) வழிவழியாக
16. தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக?
   1. வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.
   2. கலைச் சொல்லாக்கம் தருக : அ) DEBIT CARD அ) ANIMATION
17. பகுபத உறுப்பிலக்கணம் தருக: 1. அறிந்து
   புணர்ச்சி விதி தருக : 2. தலைக்கோல்

**V. எவையேனும் ஒரு வினாவிற்கு விடையளி.** (1x4=4)

18. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக?
19. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி எழுதுக?

**VI. எவையேனும் ஒரு வினாவிற்கு விடையளி.** (1x4=4)

20. திரைப்படத்தின் காட்சியில் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக?
21. வேளாண் மேலாண்மை குறித்து நீவீர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக?

**VII. எவையேனும் ஒரு வினாவிற்கு விடையளி.** (1x4=4)

22. சொற்பொருள் பின்வரும் நிலையணியை விளக்குக?
23. பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக? அ) யானைக்கும் அடிசறுக்கும்

**VIII. எவையேனும் ஒரு வினாவிற்கு விடையளி.** (1x6=6)

24. அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்கு துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழிநின்று நிறுவுக?
25. நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளை தொகுத்து எழுதுக?

**IX. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** (4+2=6)

26. அ) காய்நெல் எனத் தொடங்கும் புறநானூறு பாடலை எழுதுக?
   ஆ) தலை என முடியும் குறளை எழுதுக..

www.Padasalai.Net
CamScanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

திருப்பத்தூர் மாவட்டம்

இரண்டாம் இடைப் பருவத தேர்வு - 2023

வகுப்பு : 12 பொதுத்தமிழ் மதிப்பெண் : 45

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **7X1=7**

**1.ஈ) 1 சரி 2 சரி**

**2.ஆ) மனஉறுதியுடையவர்**

**3.அ) நம்பிக்கை**

**4.ஆ) கூற்று 1,2 சரி**

**5.இ) சகோடயாழ்**

**6.ஆ) ஜார்ஜ் மிலி**

**7.இ) வளர்ந்த**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி** **2X2=4**

**8. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?**

சிரிப்பு, அழுகை, சிறுமை(இளிவரல்), வியப்பு, அச்சம், பெருமை, சினம், மகிழ்ச்சி என்று மெய்ப்பாடுகள் எட்டு வகைப்படும்.

9. **மன உறுதியின் தேவை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது?**

எண்ணியவர் மனவுறுதியுடையவராக இருந்தால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர். எனவே மன உறுதி வேண்டும் என வள்ளுவர் கூறுகிறார்.

10. **செவியறிவுறூஉ துறையை விளக்குக.**

□ அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்தல், செவியறிவுறூஉ என்னும் துறை ஆகும்.

**எவையேனும் ஒரு வினாவிற்கு விடையளி** **1X2=2**

11. **பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.**

□ ஏற்ற காலத்தை அறிந்து ஏற்ற இடத்தையும் தெரிந்து ஒரு செயலை மேற்கொண்டால் உலகத்தையே அடைய நினைத்தாலும் அது கைகூடும்.

□ ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்.

12. கடலுக்கான வேறு பெயர்கள் அழுவம் அளம் ஆர்கலி சுழி நீராழி தென்நீர் (4 எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி** **4X2=8**

13. **தின்மை - திண்மை (வினாவிற்கு தகுந்த விடை கொடுத்திருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)**

□ தின்மை (தீமை) செய்ய திண்மை(வலிமை) இல்லை அவனுக்கு.

14. 1. **குதிரை, வேகம், ஓடு, தாவு** - குதிரை வேகமாக ஓடுவதைக் கண்ட மான் தாவிதாவி குதிக்கிறது.

2. **திரை, காண், கைதட்டல், மக்கள்** - திரையில் நடிகர்திலகத்தைக்கண்ட இரசிகமக்கள் கைதட்டுகிறார்கள்.

15. அ) நீ தொழில தொடங்குவதற்கு முன் ஆற அமர சிந்தித்து செயல்பட வேண்டும்.
ஆ) தமிழர்கள் வழிவழியாக வழிபாடு நடத்தி வருகின்றனர்.

16. 1. வாழைத்தோட்டத்தில் குயில்கள் கூவிக்கொண்டும் காகங்கள் கரைந்து கொண்டும் இருந்தன.
2. அ) பற்று அட்டை ஆ) இயங்கு படம்

www.Padasalai.Net

17. அ) அறிந்து – அறி +த்(ந்) + த் + உ

அறி - பகுதி
த்(ந்) - த் சந்தி ந் ஆனது விகாரம்
த் - இறந்த கால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

ஆ) தலைக்கோல் - தலை+ கோல்
இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.

**எவையேனும் ஒரு வினாவிற்கு விடையளி** 1X4=4

18. **நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.**

- சிற்ப நூலாசிரியர்களால் நன்னிலத்தை ஆடல் அரங்கத்திற்காக தேர்ந்தெடுத்தார்கள்.
- மலைகளில் நீண்டு வளர்ந்த ஒருசாண் அளவு கணுக்கள் கொண்ட மூங்கிலைக்கொண்டு வந்தனர்.
- மூங்கிலால் முறையான அரங்கம் அமைத்தனர்.
- தம் கைபெருவிரலால் 24 அளவினைக் கொண்டதாக மூங்கிலை வெட்டினர்.
- அதுவே அரங்கம் அமைக்கும் அளவுகோலாகும்.
- ஏழுகோல் அகலமும், எட்டுக்கோல் நீளமும் ஒருகோல் உயரமும் உடையதாக நாட்டிய அரங்கத்தை அமைத்தனர்.
- தூணின் நிழலானது அரங்கில் விழாதபடி அழகான நிலை விளக்குகளை நிறுத்தினர்.
- ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி என மூன்றுவகை திரை சீலைகளை அமைத்திருந்தனர்.
- ஓவிய வேலைப்பாடு மிக்க மேல் விதானத்தையும் அமைத்தனர்.
- சிறந்த முத்துகளால் இயன்ற மாலைகளை அரங்கம் முழுவதும் தொங்கவிடப்பட்டனர்.
- இவ்வாறு சிலப்பதிகாரத்தில் நாட்டிய அரங்கின் அமைப்பு புதுமையும், பொலிவும் பெற்று திகழ்ந்ததாக இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

19. **யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.**

□ ஒரு மாவிற்கும் குறைந்த நிலமாயினும் அதன்கண் விளைந்த நெல்லை அறுத்து உணவாக்கிக் கவளமாகக் கொடுத்தால் யானைக்குப் பல நாட்களுக்கு உணவாகும்.

□ நூறு மடங்கு பெரிய வயலாக இருந்தாலும் யானை தனித்துச் சென்று வயலில் புகுந்து உண்ணுமாயின் அதன் வாயில் புகுந்த நெல்லைவிட அதன் கால்களால் மிதிபட்டு அழிந்த நெல்லின் அளவு அதிகமாகும்.
□ எனவே அறிவுடைய அரசன் வரி திரட்டும் முறை அறிநது மக்களிடமிருந்து வரி திரட்டினால் நாடு, கோடிக்கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும் என்று பிசிராந்தையார் கூறுகிறார்.

**எவையேனும் ஒரு வினாவிற்கு விடையளி** 1X4=4

20. **திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.**

□ காட்சி என்பது கதை நகர்வுக்கு உதவுவது.

- திரைப்படத்தில் காட்சிகள் சிறப்பாக அமைந்தால் வசனத்திற்குக்கூட இரண்டாம் இடம்தான்.
- முதல்காட்சியில் தோழி ஒருத்தி கதாநாயகியிடம் தொடர்வண்டிப் பயணச்சீட்டைக் கொடுப்பாள்.

www.Padasalai.Net

- அடுத்த காட்சியில் கதாநாயகி தொடர்வண்டியில் இருப்பாள்.
- எண் 7, வீரையா தெரு ஒருவர் சொல்லி முடிப்பதற்குள், அந்த முகவரியில் காட்சி சென்று நிற்கும்.
- இவ்வாறு திரைப்படத்தில், காட்சி மறைவு, உதயம், கலவை அழிப்பு என மாறி மாறி வந்துக்கொண்டே இருக்கும்.

21. **வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.**

□ வேளாண்மைக்குள்ளும் மேலாண்மைக் கூறுகள் உண்டு.
□ சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல்,
□ உரிய நேரத்தில் விதைத்தல்,
□ நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல்,
□ அறுவடைக்குப்பின் பாதுகாத்தல்,
□ உரிய விலை வரும்வரை இருப்பு வைத்தல் என்று ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வும், பொறுப்புணர்வும் நிர்வாகநெறியும் இணைந்தால்தான் வேளாண்மை செழிக்கும்.

**எவையேனும் ஒரு வினாவிற்கு விடையளி** 1X4=4

22. **சொற்பொருள் பின்வரும் நிலையணி**

**அணி:** செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொரு பின்வரும் நிலையணி ஆகும்.

**எ- கா:** எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

**பொருத்தம்:** எண்ணியர எனும் சொல் மீண்டும் மீண்டும் வந்து கருத்து எனும் ஒரே பொருளைத் தருவதால் இக்குறட்பா சொற்பொருள் பின்வரும் நிலையணிக்குப் பொருத்தமாயிற்று.

23. **ஆனைக்கும் அடி சறுக்கும்**

**பழமொழி** : ஆனைக்கும் அடி சறுக்கும்

**பழமொழி விளக்கம்** : எத்தகைய பலசாலியாக இருந்தாலும், சில வேளைகளில் தோற்பதுண்டு

**வாழ்க்கை நிகழ்வில் பழமொழி:**

ஒருமுறை காட்டில் முயலுக்கும் ஆமைக்கும் போட்டி ஒன்று நடந்ததாம். யார் ஓட்டப்பபந்தயத்தில் எவெற்றிப்பெறுகிறார்களோ அவர்களே பலசாலி என்று அறிவித்து, போட்டியை தொடங்கினார்களாம். முயல் ஆமையை ஏளனமாகப்பார்த்து சிரித்ததாம். ‘ஆமையே! நீ அசைந்து அசைந்து ஊர்ந்து வருவதற்குள், நான் இந்த காட்டையே துள்ளி குதித்து ஓடி வந்துவிடுவேன். வீணாக எதற்கு என்னுடன் போட்டிக்கு ஒப்புக்கொண்டு வருகிறாய்! நான்தான் வெற்றி அடைவேன் என்பது உனக்கு நன்றாக தெரியும். தெரிந்திருந்தும் ஏன் வீணாக போட்டியில் கலந்துக்கொண்டு அவமானப்படப்போகிறாய்?” இவ்வாறு முயல் ஆமையை இகழ்ந்து பேசியது. போட்டி தொடங்கியது. முயல் வேகமாக ஓடியது. திரும்பிப்பார்த்த போது, தொடங்கி இடத்திலிருந்து இரண்டு இன்ச் கூட நகரவில்லை ஆமை. முயலுக்கு தலைகால் புரியவில்லை. ஆமை எப்படியும் எல்லைக்கோட்டை தொடப்போவதில்லை. சற்று நேரம் ஓய்வெடுத்துவிட்டு ஒரு நிமிடத்தில் நாம் அக்கோட்டை தொட்டுவிடலாம் என்று தனக்குள்ளே கூறிக்கொண்டு மரத்தின் நிழலில் உறங்கிவிட்டது. ஆமை மெதுமெதுவாக நடந்து வந்தது. உறங்கிய முயலையும் தாண்டியது. எல்லைக்கோட்டையும் தொட்டுவிட்டது. வெற்றியும் அடைந்துவிட்டது. கண்விழித்த முயல் தலைகுனிந்து சென்றது. ஆம்! எத்தகைய பலசாலியாக இருந்தாலும் ஏதாவதொரு இடத்தில் கோட்டை விட்விடுவோம் என்பதை இக்கதையின் மூலம் நாம் உணர்ந்தோம்.

**எவையேனும் ஒரு வினாவிற்கு விடையளி** 1X6=6

24. **அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.**

□ அறிவுடையவனாக திகழ்ந்தால் அவன் எந்த சூழ்நிலையிலும் தன்னை காத்துக்கொள்பவனாக இருப்பான்.

- தவறுகள் செய்யாதவன் அறிவுடையவன்.
- கீழ்படிபவன் அறிவுடையவன்.

www.Padasalai.Net

- எதிர்காலத்தை கணிபப் வன் அறிவுடையவன்.
- எதுவும் இல்லாதவனாக இருப்பினும் எல்லாம் இருப்பவனாகத் திகழ்பவன் அறிவுடையவன்.
- புகழுக்கு உரியவன் அறிவுடையவன்.
- ஆராய்ந்து அறிபவன் அறிவுடையவன்.
- உலகத்தோடு நட்பு கொள்பவன் அறிவுடையவன் என வள்ளுவர் அறிவுடையவன் இயல்பு, இலக்கணங்களை தன் குறள் வழி அழகாக விளக்கியுள்ளார்.
- நம் பாடப்பகுதியில் அறிவுடைமை பற்றி வள்ளுவர் கூறியுள்ள கருத்தை பின்வருமாறு காண்போம்.

25. **நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

□ உயர் பதவிகளில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பது சாத்தியமில்லை.
□ ஆனால் யார் திறமைசாலிகள் என்று அறிந்து அவர்களை அருகில் வைத்துக்கொண்டால் போதும்.
□ தெரிந்திருப்பது ஒருவகை அறிவு என்றால், யாருக்குத் தெரியும் எனத் தெரிந்திருப்பது மற்றோர் அறிவு.
□ நாலடியார் அதையே பக்குவமாகச் சொல்கிறது.
□ **"கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்**
**நல்லறிவு நாளுந் தலைப்படுவர் - தொல்சிறப்பின"**
□ நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும். வரவைத் தாண்டி நிறையச் செலவு செய்தல் கூடாது என்பதை நன்கு அறிந்தவர்கள் நிர்வாக மேலாண்மை உடையவர்கள் ஆவார்கள்.
□ ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் வரும் 'டைமன' கதையில் உதவியாளர்கள் நிதி நிலமை பற்றி பேச வரும்பொழுதெல்லாம் செவி சாய்க்காமல் இருந்ததன் விளைவு, நாட்டையே இழந்து, மனிதர்களை வெறுத்து ஒதுக்கு புறமாக வாழும் நிலை ஏற்பட்டது.
□ அது போலதான் நிருவாக மேலாண்மை உடையவர்களுக்கு,
"இதனை இவன் முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை அவன்கண் விடல் "
என்ற குறள் கூறும் வழியில் வாழ வேண்டும்.
□ அதே சமயத்தில் பார்க்காத பயிரும் கேட்காத கடனும் பாழ் என்ற பழமொழியையும் உணர்ந்து, ஒதுக்கப்பட்ட பணியை செய்பவரை கண்காணித்தல் வேண்டும்.
□ இவ்வாறு நிருவாக மேலாண்மை குறித்து இறையன்பு அவர்கள் கூறுகின்றார்.

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4+2=6**

**அ) காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே**
**மாநிறைவு இல்லதும் பல்நாட்கு ஆகும்**
**நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்கு உணினே**
**வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்.**

**ஆ) கடள்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து**
**எண்ணி உரைப்பான் தலை.**

www.Padasalai.Net